கடவுள் துணை.

வேளாளன், தூத்துக்குடி.

ஆசிரியன்:— மு. பொன்னம்பலம்.

வயது [illegible]], 1104-ஞு சுக்ல-௵ வைகாசி௴ 10-உ [மாதம் 2

"அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கிவிட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே."

சமூக வளர்ச்சியும் சங்கக் கிளர்ச்சியும்.

சமூக மக்கள் விவசாயம் கைத்தொழில் வியாபாரம் முதலிய துறைகளில் வளர்ச்சியடையவேண்டுமானால் சமூக மக்கள் ஒன்று கூடி பிறர் ஆக்கம் பொறாமையை நீக்கி யாவரும் சுகம் அனுபவிக்கவேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்துடன் வாழ்தல்வேண்டும். இவ்வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படுவது சங்கம். சங்கம் என்றால் மக்கள் பலர் சேர்ந்து அங்கத்தினராய் ஆக்க வேலைகள் பல செய்யும் அவைக்குப் பெயர். தற்கால நிலைமையில் மக்கள் முன்னேற்றமடையக் கருதி பற்பல கொள்கையுடையாரும் பற்பல வகுப்பினரும் பற்பல சமயத்தினரும் பற்பல தொழிலுடையாருஞ் சங்கங்கள் நிறுவியிருக்கிறார்கள். சங்கங்களின் விபரங்களை எழுதுவதானால் இடம் போதாததாகும். சுருங்கச் சொல்வோமானால் நாள்தோறும் புதிது புதிதாகச் சங்கங்களுந்

மகாநாடுகளும் தோன்றுகின்றன. சங்கத்தினால் பயன் இல்லையென்றால் மேலும் மேலும் சங்கங்கள் தோன்றுமா. சங்கங்களின் மூலம் அரசியல் துறையிலும் வேறு பிறபல துறைகளிலும் மக்கள் பலனடைந்து வருகிறார்கள் என்பது பிரத்தியட்ச அநுபவம். அரசரும் சங்கம் அமைத்து அங்கத்தினர் தேர்ந்தெடுத்தும் நியமித்தும் அதன்மூலம் ஆட்சி செய்கின்றனர். அரசர் தனிநிலைமையில் ஆட்சி செய்வதில்லை; செய்தல் பொருத்தமுமாகாது. அரசாங்க உத்தியோகஸ்தர்களும் பொதுச் சங்கங்களும் தனிச்சங்கங்களும் அமைத்து வேலைசெய்து சம்பள உயர்வும் உயர்ந்த வாழ்க்கையும் பெற்று வாழ்கின்றனர். தற்காலத்தில் மட்டுமல்ல முற்காலத்திலும் சங்கங்கள் பல இருந்ததாகத் தெரிகிறது. உதாரணமாகப் புலவர்கள் பலர் இருப்பினுஞ் சங்கப் புலவர்கள் பெற்ற பெருமை மற்றப் புலவர்கள் பெரும்பாலும் பெற்றார்களில்லை. சங்கப்புலவர்களோடு இறைவனும் இருந்தானென்றால், சங்கத்தின் பெருமையை என்னென்று சொல்வது. புலவருள் பெரும் புலவராகிய திருவள்ளுவர் பெருமான் தாம் இயற்றிய தெய்வத் திருக்குறளைச் சங்கத்திற்கொண்டு அரங்கேற்றினாரானால் சங்கத்தின் சக்தியை என்னென்று இயம்புவது. ஆகவே, முற்காலத்து முறையாலும் இக்காலத்து இயல்பாலும் முன்னேற்றத்திற்கு முதன்மையாயது சங்கமேயாகும். தற்காலத்தில், அழுக்காறு அகற்றி சங்கத்தை அமைத்துக் கிளர்ச்சி செய்து வளர்ச்சிபெறும் சமுகங்கள் பலவற்றுள்ளும் முக்கியமானவை இரண்டு சமுகங்கள். அவை நாட்டுக்கோட்டையாரும் நாடார்களுமாவர். இவ்விரு வகுப்பினர்களில், நாட்டுக்கோட்டையார் பல்லாண்டுகளாக வளர்ச்சிபெற்று வருகின்றனர். நாடார்கள் சில ஆண்டுகளாக வளர்ச்சிபெற்று வருகின்றனர். இவ்விரு பெருமக்கள் வளர்ச்சிபற்றி நாம் பெரும் மகிழ்ச்சியடைகின்றோமேயன்றி ஒருசிறிதும் வேற்றுமையுறுகின்றோமில்லை என்பது உண்மை. இவ்விரு பெருமக்களைப் பின்பற்றியாவது வேளாளர் வளர்ச்சியடைந்து வாழவேண்டுமென்பதே நமதுகொள்கை. வேளாளர்கள் இதுவரை இறுமாந்து இருந்துவிட்டு, இனியேனும் இவ்விதம் இருப்போமானால் இடர்ப்படுவது இயல்பு என்ப

தை யுணர்ந்து விவசாயம் வியாபாரம் கைத்தொழில் முதலிய பற்பல துறைகளில் பொருளாதார நிலைமையை வளர்ச்சிபெறச் செய்து வாழவேண்டுமென நினைத்து "வேளாளர் சங்கம்" என்று ஓர் சங்கம் அமைத்து அதன் ஆக்கம் கருதி அங்கத்தினர் சேர்த்து அங்கத்தினரிற் சிலரைக் காரியநிர்வாகக் கழகத்தினராகவும் அதில் ஒருவராகிய இலஞ்சி, திருவாளர், ஈசுவரநம்பிள்ளையவர்களைச் சங்கத் தலைவராகவும் தேர்ந்தெடுத்துள்ளார்கள். அதுபற்றி நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றோம். சங்கத்தை அமைப்பது அருமையல்ல. சங்கத்தை அதற்குரிய மக்கள் ஆசைப்பட்டு அதில் கலந்து அளவளாவி அன்புடன் வேலைசெய்யும் நிலைமையில் விரிந்தநோக்கத்துடன் நிலைபெற்று வளரச் செய்யவேண்டும். சங்கத்தின் ஆக்கவேலை பொதுவாக நிர்வாகக் கழகத்தினரையும் சிறப்பாகத் தலைவரையும் பொருத்ததாகும். நிர்வாகக் கழகத்தினரும் தலைவரும் தகுதியுடையவர்களென்றே நாம் கருதுகின்றோம். அங்கத்தினர் அதிகப்பட அதிகப்பட சங்கத்தின்மூலம் கிளர்ச்சி அதிகப்படும். கிளர்ச்சி அதிகத்தால் சமுகம் வளர்ச்சிபெறும். ஆகையால் கூடியவரை சமுகமக்கள் எல்லாருஞ் சங்கத்தில் அங்கத்தினராகவேண்டிய வேலை நடைபெறவேண்டும். சங்கத்தின் ஆக்கங் கருதி அங்கத்தினர்கள் சந்தாத்தொகை தகுதிக்கேற்றவாறு செலுத்தவேண்டும். அங்கத்தினரைச் சேர்ப்பதற்கும் சந்தாத்தொகை வசூலிப்பதற்கும் சம்பளத்திற் சிலரை நியமித்தல்வேண்டும். சம்பளத்திற் சிலரை நியமிப்பதற்கு நன்கொடையாளர்கள் நல்கும் நன்கொடைத் தொகையிலிருந்து செலவுசெய்தல் வேண்டும். இவ்வகையில் வேலைசெய்யவில்லையானால் பெயரளவில் சங்கமேதவிர பயனளவில் சங்கமாகாது. இவைகளை நன்குணர்ந்து தீர்க்காலோசனை செய்து வேளாளர் வளர்ச்சி கருதி சங்கத்தின்மூலம் கிளர்ச்சி செய்து வேண்டுவன இடம்பெற விரைந்துசெய்ய விருப்புடன் வேண்டுகின்றோம். சங்கத் தலைவர் மிகத் திறமையுடையவர்களாதலால் சங்கத்தின்வேலை இடம்பெற நடைபெறுமென்று நம்புகின்றோம். அகன்ற அறிவும் அளவற்ற அன்பும் சமயோசித சாமர்த்தியமும் நிறைந்தவரென்று சங்கத்தலைவரைக் கண்ட அளவிலேயே

கரம் கருதினேம். அதற்கேற்ப, அவர்கள் வேளாளர் சங்கக்கூட்டத்திலேயே நமது "வேளாளன்" பத்திரிகையைப்பற்றிப் பேசியதே போதியசான்ருகும். ஆற்றல் அமைந்த அவைத்தலைவரவர்கள் ஆர்வத்துடன் ஆக்கவேலை ஆரம்பிப்பாராக.

பெருஞ்சொற் பெரியார் பிரிந்தார்.

திருக்கோவலூரை யடுத்த மணம்பூண்டியில் வாழ்ந்த ம. ரா. குமாரசாமிபிள்ளையவர்கள் சென்ற சித்திரைமீ 12உ புதன்கிழமை காலை 6-30 மணிக்கு ஆண்டவனடியடைந்தார். பிள்ளையவர்களையறியாத தமிழ்மக்களிரார்; தமிழ் நாட்டாருமிரார். ஏனென்றால் பிள்ளையவர்களின் பிரசங்கவன்மையே. பிள்ளையவர்கள் பிரசங்கமென்ருல் கூடும் கூட்டத்திற்கு அளவிராது. பண்டிதர்களும் பாவலர்களும் பாமரர்களும் பற்பலவகுப்பினரும் பற்பலமதத்தினரும் பற்பல கொள்கையினரும் விருப்புடன் விரைந்து வந்து கூடுவர். பிரசங்கத்தில் அடுக்குமொழியால் அலங்கரிக்கும் அழகும் எதுகைமோனைகளின் இசைப்பும் இடைவிடாது மணிகொண்டரைத்தாற்போல் பன்மணிச் சொல்லின் பான்மையும் இரு பொருள் கொள்ளும் இயல்பில் இயம்பும் இன்சொல்லும் யாவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் இனிமையுடன் பேசும் பெருமையும் பொருட்செறிவும் பொதிந்து அமைந்துள்ளன. மலர்ந்தமனமும் அலர்ந்த முகமும் அளத்தற்கறிய அன்பும் அமைந்த அண்ணல். நெற்றியில் நீறும் கண்டத்தில் கண்டிகையும் இடுப்பில் கதரும் காண்போருள்ளங் கவர்ந்தனவன்ருே? நீலமேனியும் புன்சிரிப்புடன் கூடிய இன்மொழி இயல்பும் அன்ன நடையின் அழகும் அன்பருள்ளத்து அகலாது நிற்குமன்ருே? பிள்ளையவர்கள் ஆற்றிய தொண்டின் மிகுதியே இறந்தமைக்குப் பெருங்காரணமாகும். பிள்ளையவர்கள் இடைவிடாது நீண்டநேரம் பேசிப்பேசி நோய்கள் பலவற்றை அனுபவிக்க நேர்ந்தது. நோய் பிடிக்கப்பட்டும் பல்லாண்டுகளாயின என்ருலும், யார் அழைப்பினும் எவ்வளவு தூர

மெனினும் சிறிதும் மனந்தளராமல் வருகின்றேன் என்பது தவிர வரமுடியவில்லையென வரைந்தனுப்புவதே இல்லை. பிள்ளையவர்களை அழையாத சபைகளே இராது. பிள்ளையவர்கள் பிரசங்கஞ்செய்யாத ஊரே இராது. பிள்ளையவர்கள் பிரசங்கத்தைக் கேளாத மக்களே இரார். இவ்வாறாக ஓய்வின்றி உயரிய தொண்டாற்றினர். உயிரையுங் கொடுத்தார். நோய் பலவற்றால் பட்ட துன்பத்திற்கு அளவேயில்லை. என்றாலும் பேசுவதில் பின்னடைவரா? ஒரு சிறிதும் பின்னடையார். பேசும்பொழுது சோர்வடைவரா? சோர்வடையாது ஊக்கத்துடன் ஒருபடி உயர்வாகப் பேசுவர். இடையில் ஏதாவது உட்கொள்ளுவரா? தண்ணீர்கூடத் தரவேண்டார். கால அளவாவது குறையுமா? கூடுமே தவிர குறைவதில்லை. ஆனால் பிரசங்கம் முடிந்த கொஞ்சநேரத்தில் அவர் படும் பாடு ஆண்டவனே அறிவர். நாம் சந்திக்கும் சிற்சில வேளைகளில் அவர் படும் துயரத்தை ஆற்றொணாது அன்பின் பெருக்கால், ஐய! பிரசங்கத்தைச் சுருக்குங்கள் "சுவரை வைத்தன்றோ சித்திரம் வரைதல்வேண்டும்" என்பதுபோல உடலை வைத்தன்றோ ஊழியஞ் செய்தல்வேண்டும். தபசிகட்கும் உடல் நிலைக்கேற்ப தபஞ்செய்ய வேண்டுமென்றன்றோ விதி என்று பலவாறு கூறுவதுண்டு. என்றாலும் சொல்வதனைத்தையுங் கேட்டுக்கொண்டு புன்சிரிப்புடன் என்செய்வது என் கர்மம் எனச் சொல்லிவிடுவர். தமக்கெனவாழாது பிறர்க்குரிய பெரியாரை இனி எப்பொழுது காண்போம். தேசம், பாஷை, சமயம் மூன்றிலும் பற்றுடன் தொண்டாற்றும் பண்டிதர்கள் மிகச் சிலரில் இவர் ஒருவர். தோற்றத்தில் பழைய வைதீகர்போல் தோன்றினும் உலகியல் தந்திரத்தில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒருவர் இவரே. இவரினும் படித்த பண்டிதர்கள் பலர் இருப்பினும் பண்டிதர்களும் பாமரர்களும் பயனடையும்படியும் கேட்போருள்ளம் உருகும்படியும் கவரும்படியும் பேசும் பெரியார் இவரேயன்றி வேறு யாருமில்லையென்று இயம்பலாம். இவர் சமீபத்தில் சமரச சன்மார்க்கம் பரவவேண்டி ஓர் ஆச்சிரமம் அமைத்தார். ஆச்சிரமவேலை முடிவுபெறவில்லை. நமது "வேளாளன்" பத்திரிகைக்கும் வேண்டுவன செய்வதாய் இறப்பதற்குச்

சில தினங்களுக்கு முன் ஒரு கடிதம் எழுதினர். கடிதத்தின் கருத்துப் பின்வருமாறு:—"தூத்துக்குடியிலிருந்து வந்தது முதல் அசௌகரியம் தற்போது படுக்கையிலிருந்த வண்ணமே சிகிச்சை யாதின குணமுற்றதும் வேளாளனுக்கு வேண்டுவன எல்லாஞ் செய்வேன். திருவருளால் நேருந் தாமதத்திற்கு மன்னிக்க. எவ்வாறேனும் முயன்று சித்திரை ஆரம்பத்திலேயே வேளாளனை வெளிவந்துலாவச் செய்யுங்கள்" என்றெழுதிய பிள்ளையவர்கள் இறப்பதற்கு முன் நமது வேளாளன் வெளிவரலும் கண்டு மகிழமுடியாது போனதுபற்றியே நாம் மிக மிக வருந்துகின்றோம். அந்தோ! அன்புநிறைந்த அண்ணலை, அறிவுநிறைந்த ஆண்மையாளரை, நற்குண நிறைந்த நற்றவக்கொழுந்தை, சொற்சுவைநிரம்பிய சொல்மாரிவள்ளலை, சமரசஞானஞ்சார்ந்த சாதுவை, சிவம்வேடம்பொலிந்த சிவவடியாரை, கதர்உடுத்திய கண்மணியை, மணம்பூண்டி மதியத்தை பெருஞ்சொற் பெரியாரைப் பிரிந்தோம், பிரிந்தோம். சிவபெருமானே! உன் ஆலயத்தின்முன் தூத்துக்குடியில் சிவராத்திரியன்று அகால வேளையில் அன்புடனும் அளவிலா அகமகிழ்ச்சியுடனும் சிந்தைமகிழச் சிறப்புடன் செய்த சிறிய சொற்பெருக்கு இன்றும் இலங்குகின்றதே. சொற்பெருக்கு நிகழ்த்திய சொல்மாரி வள்ளலைக் காணோமே. தமிழ்நாடு செய்த தவப்பயன் இதுவோ? தமிழ் மக்களின் கலைக்குறையோ? "வேளாளன்" செய்த வினைப் பயனோ? பொதுமக்கள் செய்த புண்ணியக் குறையோ? யார் செய்த தீவினை இங்ஙனே வந்து மூண்டது? யாதுமறியோம். இனி எப்பிறப்பில் காண்போம், இறைவனே! இறந்தவரை நினைத்து புலம்புவதில் என்ன பயன்? பிரிந்த பெருஞ்சொற் பெரியாரிடத்து பேரன்புடையாரனைவரும் அவர் நிறுவிய ஆச்சிரமத்திற்கு ஆதரவளித்து ஆச்சிரமத்தை அதிகப்பயனளிக்கும்வழியில் நடைபெறச் செய்தலே நன்மக்கள் கடமை. இறக்குந்தறுவாயில் இறைவனை நினைத்தல் மிக அருமை. இறந்த பிள்ளையவர்கள் இறைவனை நினைந்துகொண்டே இறந்தாராதலின் அவர் இன்னுயிர் இறைவனடியில் இன்புற்று வாழ்தல் இயல்பு; ஆதலின் நாம் ஒருசிறிது ஆறுதலடைகின்றோம். சாந்தி! சாந்தி! சாந்தி!

தமிழ் மொழியும், சைவ சமயமும்

:():

திருவாவடுதுறையாதீனச் சைவப்பிரசாரகர்
திருவாளர், பொ. முத்தையபிள்ளையவர்கள்

:():

(முன் தொடர்ச்சி)

சகலாகமங்களின் சித்தாந்தம் என்னும் பொருள்படச் சர்வ ஞானோத்தரம் என்னும் பெயருள்ள ஆகமத்தில் இவ்வுவமையை எடுத்தாண்டதும் இக்கருத்தைப்பற்றியேயாம். அதற்கு இப்பொழுது வெளிவந்திருக்கும் முத்திரத்னவிருத்தியென்னும் உரையில் இவ்வுவமைபற்றிய ஆசங்கைகளுக்கு விடைகள் நன்கு காணலாம்.

பாசவுண்மை.

இனி, பாசவுண்மையைப்பற்றி ஆராய்வோம்.

தோன்றி நின்றழியும் காரியங்களெல்லாம் தத்தம் முதற்காரணத்தினின்று ஒருவினைமுதலால் காரியப்படும். இது, கடம், சால் முதலிய காரியங்கள் முதற்காரணமாகிய மண்ணினின்று குயவனால் காரியப்படுதலில் வைத்தறியப்படும். படவே, பிரபஞ்சமாகிய காரியத்திற்கும் முதற்காரணமாக மாயை ஒன்று உண்டென்பது பெறப்படும்.

பிரபஞ்சத்திற்கு, பிரமமே முதற்காரணம் என்று கொள்ளலாகாதோவெனின், பிரமம் சித்துப்பொருளாகலின், சடப்பொருளாகிய பிரபஞ்சத்துக்கு முதற்காரணமாதல் செல்லாது.

சிலந்திப் பூச்சியாகிய சித்திலிருந்து நூலாகிய சடமும் மனிதனாகிய சித்திலிருந்து நகம் உரோமம் முதலிய சடமும் தோன்றுதலானும், கோமயமாகிய சடத்திலிருந்து தேள் புழு முதலிய சித்துத்தோன்றுதலானும், சித்திலிருந்து சடம் தோன்றாது சடத்திலிருந்து சித்துத்தோன்றாதென்ற நியமமில்லையாகையால், சடமாகிய பிரபஞ்சத்துக்குச் சித்தாகிய பிரமம் முதற்காரணம் என்றல் கூடு

மெனின், இது, சிலந்தியின் உடலும் மனிதன் உடலுமாகிய சடங்களிலிருந்து நூல் நகம் முதலிய சடமும், தோன்றினவென அறியாதார் கூற்றாகலின், எவ்வாற்றானும் பிரபஞ்சத்திற்கு முதற் காரணம் மாயையேயாகுமென்க.

இவ்வாறு சித்திக்கப்பட்ட மாயையிலிருந்து தோற்றுங்காரியங்களும் பல வேறுவகையாய்க் காணப்படுதலின், அவ்வாறு காணப்படுதற்குக்காரணம் வேண்டப்படும். படவே, அது உயிர்களின் கன்மமெனப்படும். அந்தக்கன்மமும் பல வேறுவகைத்தாயிருந்தாலன்றிப் பிரபஞ்சம் பல வேறுவகைத்தாய்த் தோற்றுதல் கூடாது ஆதலின், கன்மம் பல வேறுவகைத்தாதற்கும் காரணம் வேண்டப்படும், படவே, பல வேறுவகைத்தாய் அறியாமையைச் செய்யும் ஆணவமலம் ஒன்றுண்டென்பது பெறப்படும், எனவே, ஆணவம் கன்மம் மாயை என்னும்பாசம் மூன்றுண்டென்பது பெறப்பட்டது. ஆணவமலமும் சடமாதலின், அது தானே அறியாமையைச் செய்யாதாகலின், அதனைத் தொழிற்படுத்தும் திருவருட் சத்தியைத் திரோதானமென்றும், மாயையின் காரியமாகிய உடல்முதலியவற்றை மாயேயமென்றும் சேர்த்துப் பாசம் ஐந்தென்று கூறுவதுமுண்டு.

பதியிலக்கணம்.

இவ்வாறு சித்திக்கப்பட்ட முப்பொருள்களுள், பதிப்பொருள் இயல்பாகவே அறியுந் தன்மையுடைய ஞானசொரூபம். அங்ஙனமியல்பாக அறிதற்குக்காரணம், இயல்பாகவே மலமில்லாமை. அஃதில்லாமையால், எவற்றையும் ஒருசேர அறியுந்தன்மையும் எவற்றையும் செய்யும் ஆற்றலுடைமையும், எவற்றினிடத்தும் பேரருளுடைமையும், பிறவயப்படாமையும் முதலிய ஞானகுணங்களையுடையதாம். பதியை, குணாதீதன் என்றது, மாயா காரியமான சத்துவமுதலிய முக்குணங்களுக்கப்பாற்பட்டவனென்பது பற்றியேயன்றிப் பிறிதில்லையென்க. ஞானகுணமும் இல்லாதவனென்றால், குணமில்லாத பொருள் கிடையாதாதலால் சூனியமெனப்பட்டு வழுவாம்.

பசுவிலக்கணம்.

பசுப்பொருள், இயல்பாகவே பதியுடன் பிரிப்பின்றி நிற்க, இயல்பாகவே பாசத்தடையுற்றுநிற்கும் ஞானசொரூபம். பதியுடன் இயல்பாகவே பிரிப்பின்றி நிற்கும்பொழுது, அப்பதியைத் தடைசெய்யாதபாசமீ, பசுவைத்தடை செய்தல் எவ்வாறெனின், கூறுதும்;—கடலென்பது நீருக்கிடங்கொடுத்திருக்கும் வெளி. அவ்வெளியாகியகடலோடு, பிரிப்பின்றி நிற்பது நீர். உப்பு, அவ்வெளியைப் பற்றாது நீரைப்பற்றி நிற்பது காண்கின்றோம். இவ்வாறே, பாசம் பதியைத்தடைசெய்யாது, அப்பதியோடு பிரிப்பின்றி நிற்கும் பசுவைத் தடைசெய்கதெனவறிந்து கொள்க. அங்ஙனம் பற்றாமைக்கும், பற்றுதற்குந்தான் காரணமென்னையெனின், வெளிக்கும், பதிக்கும் இயல்பாகப்பற்றுந் தன்மையின்மையும், நீருக்கும் பசுவுக்கும் இயல்பாகப் பற்றுந்தன்மை உண்மையுமே காரணமென்க இங்ஙனம், பசுவானது இயல்பாகவே பதியுடனும், பாசத்துடனும் கூடிநிற்பதென்பது பெறப்படவே, இவ்விரண்டனையும்விட்டு என்றும் நீங்குமாறில்லையென்பது பெறப்பட்டு, பாசத்தினின்று நீங்கி முத்தியடைதல் என்றுமில்லையாகுமே எனின், ஆகாது. என்னை? பதிக்கும் பசுவுக்குமுண்டான சம்பந்தம் அநாதி தாதான்மியம். பசுவுக்கும் பாசத்துக்குமுண்டான சம்பந்தம் அநாதிசையோகம். தாதான்மியமாவது, பிரிக்கப்படாதது. சையோகமாவது, பிரிக்கப்படுவது. ஆதலால், பாசத்தினின்று பசு நீங்குதல் கூடுமென்க. சையோகம் என்பதன்பொருள் கூடுதல் என்பதேயாகலின், ஒருகாலத்திற் கூடியதென்னும் சையோகத்தை, இயற்கையென்றலெவ்வாறு கூடுமெனின், இயல்பாகவே கூடியிருத்தல் பற்றிக்கூடுமென்க. அங்ஙனமாயின், சையோகமென்பானேனெனின், பிரிக்கப்படுதல் பற்றியென்க. இது எதுபோலவெனின், நெல்லினிடத்து உமியும், செம்பினிடத்துக்களிம்பும் இயல்பாகவே கூடியிருந்து பிரிக்கப்படுமாறுபோலாமென்க. ஆகவே, பாசத்தோடு கூடிப்பாசம்போலும், பாசம் நீங்கினவிடத்துப்பதியுடன் பிரிப்பின்றி நிற்றலை உணர்ந்து பதிபோலும், பசுவாகிய உயிர் நிற்குமென்பது பெறப்படும். படவே, யாதானுமொன்றைப்பற்றி நின்று அது வதுவாய்

அழுந்துதலாகிய சார்ந்ததன்வண்ணமாந்தன்மையே பசுவுக்கிலக்கணமெனவறிந்துகொள்க.

முப்பொருள்களுள், பசுவும் ஒரு தனிப்பொருளாயிருக்கத்தனித்துநில்லாதும எதுபோலவெனின், அக்கினி ஒரு பொருளாயினும், அது, கட்டை கல் முதலியவற்றைச்சார்ந்துநிற்றலேயன்றித் தனித்து நில்லாதவாறுபோலுமென்க.

இயல்பாகவே, பாசத்துடன் கூடியிருக்குமென்றதனால், அப்பாசத்தை, பசுதானே நீக்கிக்கொள்ளமுடியாதென்பதும் பெறப்படும். படவே, பக்குவகாலத்துப் பதியே குருவாகத்தோன்றிச் சிவ தீக்கைசெய்து பாசத்தைநீக்கிப் பிரிப்பின்றிநிற்கும் தனது சொரூபத்தை விளக்குவனென்க.

பாசவிலக்கணம்.

இனி, பாசவிலக்கணத்தையும் சிறிது ஆராய்வாம். உயிர்கள்தோறும், வேறுவேறான அறியாமையைச் செய்வது ஆணவமலம். எனவே, ஆணவமலம் பொருளால் ஒன்றாயும் பலசத்திகளையுடையதாயும் உள்ளதெனவறிந்துகொள்க. இது எதுபோலவெனின்; இருள் ஒன்றாயிருந்து பல கண்களையும் பல வேறுவகைப்பட மறைத்தாற்போலுமென்க. உடலும், உலகும் தோன்றுதற்காதாரமாய், அவற்றில் மயங்கச் செய்வது மாயை. விருப்பு, வெறுப்புக்களையும், சுக துக்கங்களையும், உண்டுபண்ணுவது கன்மம்.

௩. தமிழ் மொழியும சைவசமயமும்.

இனி, இவ்விரு மொழிகளையும், இணைத்தமைத்த நோக்கம் யாதென்பதைப்பற்றி ஆராய்வாம். சைவசமயத்தின் பொருளமைதியை ஒத்துத் தமிழ்மொழி அமைந்திருத்தல்பற்றி, இணைத்தமைத்துவைத்ததென அறிந்துகொள்க. எவ்வாறெனின்; கூறுதும்:—

சைவசமயத்தில், பதி பசு பாசமென முப்பொருள்களுள்ளதுபோல, தமிழ்மொழியில், ஹரி:ஓமொந்துசிந்தம் என்பது

பதியையும், அகரமுதலிய உயிரெழுத்துக்கள் பசுவையும், ககர முதலிய மெய்யெழுத்துக்கள் பாசத்தையுங்குறித்தன. பசுவானது பாசத்தோடு கூடிநிற்கும் பெத்த நிலைபற்றியும், பாசத்தினின்று நீங்கி நிற்கு முத்திநிலைபற்றியும், இருதிறப்படுமாறுபோல, உயிரெழுத்துக்கள், குறில், நெடில் என இருவகையாயமைந்துள்ளன. பாசத்தோடுகூடினவிடத்து, அறிவு குறைந்திருந்தமையைக்குறிலும், பாசம் நீங்கினவிடத்து, அறிவு நிறைந்திருத்தலை நெடிலும் குறித்தன. இன்னும், உயிரெழுத்துக்களில், ஐகாரம் ஔகாரமிரண்டும் தன்னைச் சுட்டும்பொழுதும் அளபெடுக்கும்பொழுதும் நெடிலாயும், மொழிக்குறுப்பாய்ப் பிறஎழுத்துக்களோடு புணரும்பொழுது குறிலாயும் ஒலிக்கப்படுமாதலின், குறிலும், நெடிலும் குறிலும்நெடிலுமென உயிரெழுத்துக்கள் மூவகைப்படுமென்றாகி அவை, முறையே, சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலரென்னு மூவகை உயிர்வருக்கங்களைக் குறித்தனவாகக் கொள்ளுதலுமொன்று. இன்னும், பசுவானது, என்றும் பதியுடன் பிரிப்பின்றிநிற்குமாறுபோல, உயிரெழுத்துக்கள், ஹரி:நமோத்துசித்தம் என்பதனோடு; பிரிப்பின்றி நின்று மெய்யெழுத்துக்களோடு கூடிப்பிரியு முறைமையில், அவற்றின்வேறாய் முற்பட்டுநின்றன. உயிரெழுத்துக்கள், தனித்தியங்கும் வன்மையுடையனவென்பதற்கு, மெய்யெழுத்தோடு கூடாது தனித்தியங்கும என்பதே பொருளாகக் கொள்க. அங்ஙனமாயினும், ஹரி:நமோத்துசித்தம் என்பது, விட்டுணுவைக்குறித்த வணக்கமாகலின், அது சைவசமயக்கடவுளை எவ்வாறு குறிக்குமெனின். "அரியலாற்றேவியில்லை யையன் ஐயாறனுர்க்கே" என்பது தேவாரமாதலின், சிவபெருமானுக்குவிட்டுணு சத்தியாதல் தெளிக. சத்தியை வணங்கவே சத்தனையும் வணங்கினதாகுமாகலானும், சத்தனை வணங்குதலும், சத்திவழியாலன்றி முடியாது ஆகலானும், இக்கருத்துப்பற்றியே, "அவனருளாலே யவன்றாள் வணங்கி" யென மணிவாசகப் பெருமானருளிச் செய்தனராகலானும், "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" என அன்னையைமுற்கூறியதும், இக்கருத்துப்பற்றியே யாகலானும் அரிவணக்கமும் சிவவணக்கமாகுமென வறிந்துகொள்க.

இனி, பாசம், ஆணவம், கன்மம் மாயையென மூவகைப்படு மாறுபோல, மெய்யெழுத்துக்கள், வல்லினம் மெல்லினம் இடையினமென மூத்திறப்பட்டன. வல்லினம், ஆணவத்தினையும், வல்லினத்தைச் சார்ந்து நிற்கும் மெல்லினம், அவ்வாணவத்தைச் சார்ந்து நிகழும் கன்மத்தினையும், அவ்விரண்டினங்களின் வேறான இடையினம், அவ்விருபாசங்களின் வேறான மாயை யினையும் குறித்தவாறென அறிந்துகொள்க.

தமிழ் மொழியைப் பயிலு முறை.

இத்துணைப் பெருமைவாய்ந்த தமிழ்மொழியைப் பயலுமுறை முற்காலத்தில் சமயத்தையும் உடனிகழ்ச்சியாகப் பயிலுமுறைமையில் அமைந்திருந்தது. எவ்வாறெனின்; எழுத்துக்களின் வரிவடிவமும், உச்சரிக்கப்படும் ஒலிவடிவின்முறையும், தெரிந்துகொண்டபின்னர், சில எழுத்துக்களைச்சேர்த்து மொழியாக்கிப் பயிலத்தொடங்குங்காலத்து, அறஞ்செயவிரும்பு; ஆறுவதுசினம். எனத்தொடங்கி, அதிற்பயிற்சிபெற்றபின்னர், அதனினின்றும் அதிக எழுத்துக்களமைந்துள்ள மொழிகளைப் பயிலத் தொடங்குங்காலத்து, அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம், ஆலயந்தொழுவது சாலவுநன்று. எனத்தொடங்கி, அதிற்பயிற்சி பெற்றபின்னர், வாக்குண்டாம் நல்வழி நன்னெறி முதலியன பயின்று, அதன்பின்னர், இலக்கணமும், பெரியபுராண முதலிய சைவ இலக்கியமுங்கற்று, அதன்பின்னர், சித்தாந்த சாஸ்திரங்களை ஞானகுருவினிடத்து உபதேசமுறையிற்கேட்டு சிவானந்தத்தை யனுபவித்து வாழ்தல் முற்காலத்து முறைமை.

இவ்வாறு "அறஞ்செயவிரும்பு" எனத் தொடக்குதலால், தருமம், நல்லொழுக்கங்களிற் சிந்தையும், "அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" எனத்தொடங்குதலால், தெய்வவழிபாட்டிற் சிந்தையும் செல்லுமாதலின், மொழிப்பயிற்சியுடனே சமயப்பயிற்சியும் உடனிகழ்தல் காண்க.

இக்காலத்து வித்தியாசாலைகளில் கல்விகற்பிக்கு முறைமை மொழிப்பயிற்சிக்குமட்டும் உபகாரமாகுமன்றி, நீதிஒழுக்கம் சமய

ஒழுக்கம் முதலிய ஒழுக்கபயிற்சிக்கு உபகாரமாதலில்லையென்பது எவருமறிந்ததொன்று.

இக்காலத்து வித்தியாசாலைகளில் கல்வி கற்பவருக்குப்பொருளாயீட்டுதல் கூடுமென்பதும், முற்காலத்து முறைப்படி கல்வி கற்பவருக்குப் பொருளையீட்டுதல் கூடாதென்பதும் பெரும்பாலாருடைய கொள்கையாயிருக்கின்றன. இக்காலத்து முறைப்படி, கல்வி கற்றோர் பலர், பொருளீட்டமுடியாது வருந்துதலையும், இக்காலத்தும் முற்காலத்து முறைப்படி கல்வி கற்றோர் சிலர், வருந்தாது பொருளீட்டுதலையும் அவரறிந்திலர். ஆகவே, கல்வியினாலாய பயன் ஒழுக்கமேயன்றிப் பொருளீட்டுதலன்றென்பதும், ஒழுக்கமுடையாருக்குப் பொருள்தருதல் இறைவன் கடமையாமென்பதும் இனிது விளங்கும். இக்கருத்துப்பற்றியே,

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ
ன்நற்றாடொழாஅ ரெனின்" எனவும்,

"ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையாரில்" எனவும், அருளிச்செய்தனர் திருவள்ளுவநாயனாரும்.

ஆயினும், முற்காலத்து முறைப்படி கல்வி கற்கவிரும்புவோர் அரியராதலின், அங்ஙனங்கல்வி கற்பிக்குமுறையில், இக்கல்வியினால், பின்னர் எப்பயனும் காமடைதல் கூடுமென்ற உறுதிப்பாடு தோன்றுதற்கு முன்னறிவிப்பாகக் கற்பவருக்கு ஊண், உடைமுதலியன வுதவிக்கற்பித்தல் பெரும்புண்ணியமாகும்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

பாவம்.

சென்னை, திருவாளர். திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள்,
ஆசிரியர்,
நவசக்தி

பாவம் என்னுஞ் சொற்கு விரிபொருள் கூறவேண்டுவதில்லை. அஃது ஆதியா அநாதியா என்னும் ஆராய்ச்சியும் வேண்டுவதில்லை. உலகில் பாவம் என்னுஞ்சொல் வழக்கிலிருக்கிறது. பாவவினை இஃது என்று ஒவ்வொருவருக்குந் தெரியும், "பாவம் செய்யாதே" என்று சொல்லாத பெரியோரில்லை. மனச்சான்றெனுந் தெய்வ உணர்வுக்கு மாறுபட்டு நிகழ்த்தப்பெறும் வினை பாவவினை யென்று சுருங்கக் கூறலாம்.

"பாவம் என்பது மனிதப் பிறப்புக்குத்தானு உண்டு; ஏனைய விலங்கு பறவை முதலிய அஃறிணை உயிர்கட்கில்லையோ" என்னும் வினு சிலவிடங்களினின்றும் எழலாம். மனிதன் பாவவினையாற்றும்போது "அதைச் செய்யாதே" என்று அவன் மாட்டுள்ள ஓர் அறிவு தடைசெய்கிறது. அவ்வறிவு விளக்கம் விலங்கு முதலிய உயிர்கட்கில்லை என்பது வெள்ளிடைமலை. ஆதலால் விலங்கு முதலிய உயிர்களைப்பற்றி ஈண்டு ஆராய்வேண்டுவதில்லை. "பாவம் செய்யாதே" என்று உணர்த்தும் அறிவுடைய மனிதனைப்பற்றியே ஈண்டுச் சிந்தித்தல்வேண்டும்.

"பாவம் செய்யாதே" என்று மனிதனைநோக்கியே ஆன்றோர் தெய்வநூல்கள் கூறுகின்றன. மனிதன்பாலுள்ள மனச்சான்றெனுந் தெய்வ உணர்வும் அவ்வாறே அறிவுறுத்துகிறது. எந்நூல் கூறினும், எவர் அறிவுறுத்தினும், எவ்வறிவு தடுப்பினும் மனிதன் பாவஞ்செய்யாதிருக்கிறானே? மனிதன் பாவஞ்செய்துகொண்டேயிருக்கிறான். பாவச் செயல்களில் ஒருவனுக்கும் மற்றொருவனுக்கும் வேற்றுமையிருக்கலாம். ஒருவன் ஒருவித பாவஞ்செய்கிறான்; மற்றொருவன் மற்றொருவித பாவஞ் செய்கிறான். பாவத்தினின்றும் நீங்கிய மனிதன் இருக்கிறானா என்பதும் அதனின்றும் பிழைத்துவாழும் முறையிருக்கிறதா என்பதுங்கவனிக்கத்தக்கன.

உலகில் பாவம் நிகழ்த்துவோரை ஒறுக்கச் சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மனிதனால் ஆக்கப்படுஞ் சட்டங்களால் பாவ வினைகள் அறவே களையப்படும் என்று நாம் கூற முந்தவில்லை. சில சமயங்களில் அச்சட்டங்களே பாவ வினைகளுக்குத் துணைநிற்பனவாகின்றன. இருந்தாலுஞ் சட்டஞ்செய்யப்படுவதன் நோக்கம் பாவத்தைத் தகையவேண்டுமென்பதன்றோ? பண்டைநாளில் மனிதன் அரசாங்கம் கோலியதன் கருத்தென்ன? உலகில் பாவச்செயல்களைத் தடுத்துப் புண்ணியச் செயல்களைப் பெருக்கற்கேயாகும். அவ்வரசாங்கம் பாவிகளால் நடத்தப்படுமானால் உலகில் பாவமே தாண்டவம்புரியும். அரசாங்கத்தை நடத்துவோர் மனிதராகலானும், மனிதர் ப வத்துக்கெளியராகும் இயல்பினராகலானும், சில விடங்களில் அரசாங்கத்தால் நலன் விளையாதொழிகிறது. அரசாங்கமும், அஃது ஆக்குஞ் சட்டமும் கடவுள் இயற்கைச் சட்டத்துக்கு அரண்செய்வனவாக விருத்தல்வேண்டும்.

மனிதனைப் பாவத்தினின்றும் பிழைப்பிக்க இயற்கைச் சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அச்சட்டங்களைச் சிலர் நூறாகவும் சிலர் பத்தாகவும் சிலர் எட்டாகவும் சிலர் ஐந்தாகவும் தொகுத்துள்ளார். கொலை செய்யாதே; களவாடாதே; கள்ளுண்ணாதே; பிறர்மனை விழையாதே; பொய் பேசாதே; என்னும் இவ்வைந்தில் எல்லாமடங்கும். இவ்வைந்தறங்களையும் முறையே நிகழ்த்திவருவோன்பால் பாவம் அணுகுமோ? அணுகாது. ஒவ்வொருவனிடம் ஒவ்வொரு குற்றம் நிகழ்ந்துவிடுகிறது. உலகில் 'பாவஞ்செய்யாதே பாவஞ்செய்யாதே' என்று பேசுவோர் பலர்: எழுதுவோர் பலர். பேசுவோரும் எழுதுவோரும் தம்மைச்சோதித்துப்பார்த்துத் தமது நிலைகண்டு தமது குறையுணர்ந்து வருந்தல் வேண்டும். பிறர் மனைவியை விழையும் ஒரு நீதிபதி பிறர் மனைவிழைந்த ஒருவனைத் தண்டிக்கிறான். நியாயச்சட்டவழிநின்று இவன் தண்டனை கூறியது போற்றத்தக்கதே. ஆனால் தண்டிக்கும்இவன் பாவத்தினின்றும் பிழைத்தானா என்பது கவனிக்கப்படல்வேண்டும். அவனும் கோயிலுக்குப்போய் "ஆண்டவனே! நான் பாவி, என்பாவத்தை மன்னித்தல் வேண்டும்" என்று வேண்டுகிறான். உலகில் பாவஞ்செய்யும்

ஒருவன் மற்றொருவனை நோக்கிப் "பாவஞ்செய்யாதே" என்று சொல்லிவருகிறான். இம்முறையால் பாவம் எவ்வாறு நீங்கும்?

மனிதன் பாவத்தில் பிறந்து பாவத்தில் வளர்வது கண்கூடு. பாவஞ்செய்வது தவறு என்பதை மனிதன் உணர்கிறான். உணர்ந்தும் அதை அவன் செய்யாமலிருக்கிறானா? இல்லையே! என் செய்வது! ஒருவன் பிறர்க்குப் போதிப்பதோடு தன்பாலுள்ள குறைகளைக் களைய முயலல்வேண்டும், எவன் ஒருவன் தன்பாலுள்ள குறையைக்களையாது அக்குறையைப் போக்குமாறு பிறர்க்குப் போதிக்கிறானோ அவனினும் கொடியன் வேறொருவனிருப்பனோ? எவன் ஒருவன் தனது குற்றமுணர்ந்து வருந்துகிறானோ அவனே தூயனாதற்கு வழிதேடுகிறவன். திருவருள் ஞானங் கைவரப்பெற்ற பெரியோர்கள் "குலம் பொல்லேன், குணம் பொல்லேன்" என்று அருளிச்செய்திருப்பது கவனிக்கற்பாலது.

"குலம் பொல்லேன் குணம் பொல்லேன்
குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன்
கோலமாய
நலம் பொல்லேன் நான் பொல்லேன்
ஞானியல் லேன்
நல்லாரோடி சைந்திலேன்
நடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா
தொழிந் தேனல்லேன்
வெறுப்பனவுமிகப் பெரிதும்
பேசவல்லேன்
இலம் பொல்லேனிரப்பதே
ஈயமாட்டேன்
என் செய்வான்றோன்றினேன்
ஏழையேனே."

(தொடரும்)

எத்தொழில் சிறந்தது?

இலங்கை. திருவாளர், ச. முருகையா பிள்ளையவர்கள்.

உலகத்திலும் காணப்படும் மக்களனைவரும் ஒரு திறப்பட்ட அறிவினராயின்றி ஏற்றத் தாழ்வுடையோராயிருக்கக் காண்கின்றோம். அவரவரினறிவின் றன்மைக்கேற்ப செயலிலுங் காண்கின்றோம். ஒருவன் தந்நலமட்டுங் கருதியும் மற்றொருவன் தந்நலமேயன்றி தமது மனைவிமக்கள் நலம் மட்டுங்கருதியும், சிலர் தமது கிளைஞரது நலத்தையுங்கருதியும் இவரினுஞ்சிறந்த அறிஞனொருவன் தமது கிராம மக்கள் முன்னேற்றங்கருதியும் பேரறிவாளன் தானுறை கிராமமேயன்றி தமது தேசமக்கள் முன்னேற்றங்கருதியும் அருளுடைப் பெரியோர் தேசமேயன்றி இவ்வையக முற்றும் இன்புற்று வாழும் வண்ணமும் செயலாற்றி வருகின்றனர். இவ்விதம் காணப்படுவோரில் பொது நலங்கருதி யுழைப்போர் சிலரும் சுயநலங்கருதி யுழைப்போர் பலருமாய்ப் பெருகியிருக்கக் காண்கின்றேம்.

இதைப்போலவே உலகமக்கள் நலங்கருதி நாம் செய்யவேண்டிய சிறந்ததொழில் யாதெனச் சிந்தித்து நடத்திவருவோரும் நாளடைவில் குறைந்த தொகையினராகிக்கொண்டு வருகின்றனர். கைத்தொழிலைக் கைவிட்டோரும் பலர். உதாரணமாக பலவகை வாணிபஞ்செய்வோரும், வட்டிக்குக் கொடுத்து வாங்குவோரும், நகை முதலியவற்றை யடவுபிடிப்போரும், நிலம் புலங்களுக்கு ஈட்டின் பேரில் பணம் கொடுத்து தொழில்ச் செய்வோரும், கள்ளு சாராயஞ் சூது முதலியவைகளுக்கு உத்திரவு பெற்றுக் கடைவைத்து நடத்துவோரும், யந்திரசாலை களமைத்தும், நடனசாலை யேற்படுத்தியும் படக்காட்சி காட்டியும் தொழில் நடத்துவோரும், நாகரீகச்சாமான்கள் தயாரிப்போரும், கீழ், மேல் உத்தியோகங்களேற்றுப் பணி செய்வோரும், இன்னும் இதுபோன்ற பல்வேறு தொழிலிலீடுபட்டுழைப்பவராயு மிருக்கக் காண்கின்றேம்.

உற்று நோக்குழி இம்முயற்சிகள் மக்களுக்கு நலமொன்றே பயக்கும் நிலைமையிலில்லை யென்பது பெறப்படும். பொது ஜனோபகாரத்திற்கு அநுகூலமில்லாத தொழில்களொருபுறமிருக்க, சில தொழில்கள் மக்களுக்குத் தீங்கையே தந்து நிற்கின்றது. இம்முயற்சி செய்வோரிலும் ஒரு சிலரே நல்ல நிலைமையிலிருக்கக் காணுதல் கூடும். பெரும்பான்மையோர் பலவகைப் பொருத்தங்கள் செய்து இடருற்றும் சிலர் கடன்கொடுத்து வாங்குவதில் மிடியுற்றும் சிலர் விலையேற்ற இறக்கத்தால் நட்டமடைந்தும் இன்னும் பலவித மார்க்கங்களில் நலி வெய்தியும் வருகின்றனர். பொதுவாகக் கூறுமிடத்து "தீவினை விட்டீட்டல் பொருள்" என்னும் வாக்கியத்திற்கிலக்காயுள்ளவர்களைக் காண்பது மரிது. இனி மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் பொருளும், நலந்தரும் தொழிலுந் தான்யாது?

அதன் பெருமைதானென்னை? யென்று ஆராயப்புகின் உண்டியும் உடையுமே மக்களுக்கு இன்றியமையாது வேண்டற்பாலதென்பது பெறப்படும். "ஒரு நாளுணவை யொழி யென்றா லொழியா" வென்பது ஔவை வாக்கு. உண்டியின் சிறப்பைப் பற்றிப் புலவரொருவர் கூறுமிடத்து "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று புகழ்ந்து கூறியிருக்கின்றனர். "நிலத்துக் கணி யென்ப நெல்லுங்கரும்பு" மென்று நான்மணிக்கடிகையும் "நெற்பயிர் செய்" என்று நமது ஔவைப் பிராட்டியும் வியந்து கூறியுள்ளாள். நெல் முதலிய தான்ய விளைவைச் செய்யும், நிலங்களுக்கு வேலி கோலியும், பாத்திகட்டியும், புழுதிபட ஆழ உழுதும், நீர் பாய்ச்சியும் விதை விதைத்தும் களை பிடுங்கியும், பயிர்காத்தும், பருவத்திலறுவடை செய்தும், தாள்நீக்கி தான்யங்களை யொருங்கு திரட்டியும், சேரிலிட்டும், குதிரிலிட்டும், சேமித்து வைத்து மக்களுக்குப்பயன் படுத்து மித்தொழிலே வேளாண்மைத் தொழிலாகும். உழவுத் தொழிலு மிதுவேயாம். ஏனைத் தொழிற்பொருள்களும் அதனால் கிடைக்கும் ஊதியமும் ஒரு சிலருக்கு

ப்பயன் படுமேயன்றி இத் தொழில் பொருள் போல் யார்க்கும் பய ன்படுவதின்று. ஏனைய தொழிலில் கிடைக்கும் தீமையைப் போல வும் ஏகதேச நன்மையைப் போன்று மில்லாது நன்மையே தருமித் தொழிலொன்றே யாவற்றினுஞ் சிறந்ததாகும். "மேழிச்செல்வம் கோழைபடாது" என்று நமது ஔவைப் பிராட்டியும் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந் தொழுதுண்டு பின்செல்பவர்" என்று தேவ நுமிதனைச் சிறப்பித்துக் கூறுவாராயினர். உதாரணமாக எத்தகைய சீர்படைத் தோராயிருந்தாலும் உயரிய பதவி பெற்றவராயிருந்தாலும், மெய்வருத்தம் நோக்கி பிற தொழில் செல்பவராயிருந்தாலும் வேளாண்மையாலுள்ளதாய உணவுப் பொருளின்றி வாழுதல் முடியாது. மக்களுக்கேயன்றி ஏனைச் சீவராசிகள் பலவற்றிற்கும் இத் தானிய பாகங்கள் உணவாகின்றது.

வேளாண்மை யென்பதற்கு உபகாரமென்பது தான் பொருள். "இருந்தோம்பி யில் வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" என்னும் குறளுக் குரிய பரிமேலழகர் உரையிற் கண்டு கொள்க. வேளாளர் என்னும் பதமும் இத் தொழில் பற்றியே வந்தது. உழவு யென்னுமதிகாரத்திற் குறையெழுதப் புகுந்த பரிமேலழகர் சிறுபான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கு முரித்தாய [குலத் தொழில்] உழவுத் தொழில் என்றும் கூறியுள்ளார், இத் தொழிலையே நம்முன்னோர் பொன்னேபோற் போற்றி வந்தனர். இதன் பெருமையை பெரியபுராணம் "திருக்குறிப்புத் தொண்டர் சரிதத்தில் எல்லாவறமும் யான் செய்ய அருளவேண்டு மென்று காஞ்சிப் பதியிலம்பிகை நோற்ற தவத்திற்கிரங்கி பெம்மிறைவன் அறம் வளர்க்கும் வித்திது வென இரு நாழி நெல்லளித்த வரலாற்றில் கண்டு மகிழ்க.

அறத்திற்கு வித்தாய வேளாண்மையைச் செய்யாவிடில் நாட்டு வளங்குன்றுமே, தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் கடனாற்றுதல் முடியாதே, தேவர் பூசையும் திருவிழாவும் நடத்தவியலாதே, தான்ய இலக்குமியும் நம்மிடம் சேராளே, பருவத்தே பயிர்

செய்ய வேண்டுமேயென் இரவு பகலாய்ச் சிந்தித்துத் தொழிலில் மூழ்கி நிற்பர். இவ் வேளாண்மையும் மழைவளங் குன்றின் நடவாதாகையால், மழை முகங்காணுத பயிர் வாடிவிடுமே யென்ற ஏக்கத்துடன் இறைவர் கடைக்கண் பார்த்தருளுதல் வேண்டுமென்று திருவருட் சிந்தையிலீடு பட்டிருப்பர். பயிர்காட்டும் புயலானாகிய எம்பிறைவனும் நன்னெறியாளரின் நன் முயற்சிக்கிரங்காதிருப்பனோ.

"குடிசெய்வலென்னு மொருவற்
குத் தெய்வ மடிதற்றுத் தான் முந்துறும்"

என்னும் தேவர் திருவாக்கின்படி காலமழை கனியச்செய்து காத்து நிற்பர். இத்தகைய சிறப்பு வாய்ந்த தொழிலை நம் முன்னோர் கையாண்டு வந்தபடி, பின் சந்ததியாராகிய நாம் கைப்பிடித் தொழுகவில்லை யென்பது வெளிப்படை. குலத்தொழிலே யென உண்மையறிந்து செய்வாரைக் காண்பதருமை. பிறரைக்கொண்டு செய்விப்போர் சிலர். அது தானும்செய்யாது அலக்ஷியம் செய்வோரும் பலர். நிலத்திற்குரியவன் நேரிற் சென்று கவனியாது விட்டது அதன் வருவாயுங் குன்றவே செய்யும். வருவாய் குன்றவே நிலமும், நாளடைவில வனினின்று நீங்கும். இக்காரணம் பற்றியே அக்காலத்து நிலவளனு மிக்காலத்துக் காணப்படவில்லை, நிலமும் பலருக்கில்லாது போயிற்று "செல்லான் கிழவனிருப்பினிலம்புலந் தில்லாளினூடி விடும்" என்னும் தேவர் திருவாக்கு மிவ்விடத்திற் சிந்திக்கற்பாலது.

நிலவளனேயன்றி மக்கள்உடல் நலனுங்குன்றிவரக் காண்கின்றோம். உண்டவன் உரஞ் செய்வானென்பது ஒரு பழமொழி. இதனைத் தவறாக அர்த்தஞ் செய்வாருமுளர். உடல் பலம்பெற உண்ணவும் வேண்டும், உண்ணுதற்கு உழைப்பு மிகுதி வேண்டும் இன்றேல் முடியாது. நன்றாய் வேலை செய்யக்கூடிய வனதிக முண்ணுவதை யநுபவத்தில் பார்க்கிறோம். காலசைத்தல், கையசைத்தல் முதலிய உபாயத் தொழில் செய்வோர் உபாயமாயுண் பதையும் பார்க்கிறோம்.

(தொடரும்)

நன்னில வள்ளி அல்லது நங்கையினடக்கம்.

——:():——

...ழநாடு, ஸ்ரீமதி செல்லம்மாள் அவர்கள்

நாகையைச் சேர்ந்த வெளிப்பாளையத்தில் சிலவாண்டுகளுக்கு முன்னர் நடேச பிள்ளை யென்னுமொருவர் பெருஞ்செல்வந்தரா யிருந்தாரெனினும் ஆடம்பரங்களின்றி அடக்கமாக வாழ்ந்து வந்தார். இவருக்கு செல்வ மதிகம். இவரிடத்தில் நன்னிலமெ னும் கிராமத்திலுள்ள உருத்திரபதி பிள்ளை யென்னுமொருவர் நீண்டகாலமாக உண்மையுடன் அலுவல் பார்த்துவந்தார். இவரு க்கு ஆஸ்தியெல்லாம் ஒரு சிறுவீடும உபாயமான நிலங்களுந்தான். இவரது ஏக புத்திரனை குமரேச பிள்ளை ஒழுக்கத்திலுயர்ந்தோ னும் அடக்கத்திற் சிறந்தோனும் சிறிது ராஜீபப் பற்றுடை யோனுமிருந்து வந்தான். பிறரிடத்திலடிமைச் சேவகம் செய்ய விரும்பாது தனது நிலத்தைச் சொந்தப்பயிர் செய்து, அதன் வருவாயைக் கொண்டும் வீட்டின் கூடத்தில் ஒரு சிறு தறிவை த்து நெய்து அதில் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டும் மிகச் செட்டாகக் காலங்கழித்து வந்தான்.

ஒழுக்க முடைய மாப்பிள்ளை கிடைத்தலரிது என்ற ஒரே கருத்தை மட்டும் கொண்டவராய் காலஞ்சென்ற உருத்திரபதி பிள் ளையின் மகனாகிய குமரேச பிள்ளைக்கு, நடேச பிள்ளை தமது மூத்த புதல்வியாகிய வள்ளியம்மையை மணமுடித்து வைத்தார். வள்ளியம்மையும் கற்புடை புத்திசாலியான பெண்ணாகையால் தன் புருஷனது வார்த்தைக்கு கீழ்படிந்து நடந்தும வருவாய்க்கி சைய வாழவேண்டியதை யறிந்தும செட்டாய் மிதவியயமாய் தனது வாழ்க்கையை யினிது நடாத்திவந்தாள். ஒரு நாள் தன் வீட்டில் சமைக்க அரிசி தீட்டிகொண்டிருக்கும் பொழுது வெளிப்பாளையத்திலுள்ள தனது பக்கத்து வீட்டுக்காரப் பெண் கள் மூவர் தன் நிலத்தில் ஒரு கல்யாண வீட்டுக்கு வந்திருந்தவர்

கள் இவர்களைப் பார்த்துப் போவோமென்று இவள் வீட்டிற்குச் சென்றார்கள். வள்ளியம்மையும் வந்தவர்களை ஆசையுடன் வரவேற்று வெற்றிலை பாக்குக் கொடுத்து க்ஷேமலாபங்களை விசாரித்துக் கொண்டிருக்கும்போது, வந்தவரி லொருத்தி வள்ளி! நீ வளர்ந்த அருமையென்ன; உனது பிறந்த வீட்டின் பெருமையென்ன; இச்சிறிய வீட்டில் இருந்து வாழும்படி உனக்கு விதியிருந்ததாக்கும், என்று தும்பிடி விஷைவறிவிப்பதுபோல் வருத்தப்பட்டுக் கூறவும்; மற்றொருத்தி வீடுமட்டும் பெரிதாயிருந்தால் போதுமா? மற்ற அம்சங்களும் பொருந்தியிருக்கவேண்டாமா? கிடையாத விடம் கிடைத்துப்போய் விட்டதென்று இவள் தகப்பனார் தான் ஒரேபிடிவாதமாய் நின்றுவிட்டாரே, அவரைச்சொல்ல குற்றமென்னவிருக்கிறது, இவளுக்குக்கொடுத்துவைத்தது இவ்வளவுதானென்று சொல்லவும்; இதனையடுத்து மூன்றாவதாக மற்றவள் இதெல்லாமென்ன பேச்சு இவைகளைச் சொல்வதில் அவள் நடந்தவைகளை நினைத்து வருத்தப்படக்கூடும். என் னரி யேங்குவாள் என்று சொல்லவும்; இவைகளையெல்லாம் கேட்டவள்ளி இவர்களின் பேதமையை யொருபுறம் நினைத்தும் புன்சிரிப்போடும் உண்மையறியாமலும், தெரியாத்தனத்தாலும் அறுதாபப்பட்டு பேசுகிறீர்கள். காருத்தொருமித்து வாழ வீடு பெரிதாயிராவிட்டாலென்ன. பெரிய வீட்டில் வாழ்பவர்கள் மட்டுந்தானே சந்தோஷமாயிருப்பார்கள். அப்படி வாழ்பவர்களிலெத்தனைபேர் ஓயாக்கவலையும் தீராச்சஞ்சலத்திலுமிருக்கின்றனர். மேலும் பெரியவீட்டிலிருக்கப்பட்டவர்களுக்கு வேலையாட்களின்றி முடியாது. உயர்ந்த நிலைமையிலுள்ள அந்தவீட்டு எஜமானும் மேல்மாடி முதலியவைகளிலிருக்கக்கூடும் அவரைகாணவந்து போவாரும் பலர்.

சிற்றுண்டி போஜனங்களுங் கூட வேலைபாட்களே கொண்டு கொடுக்கக்கூடிய நிலைமையிருக்கும். அதிகமாய்க் கூறுவானேன் அவருக்குச் செய்யவேண்டிய கடமையை அவரது மனைவி செய்துகொடுக்கமுடியாமலிருக்கும். இது போன்ற வாழ்க்கையைத் தானா நீங்கள் சிறப்பித்துக் கூறுகின்றீர்கள். இது சிறிய வீடா

யிருப்பதினால் அம்மாதிரியான தொந்திரவுக் கொன்றுமில்லை. வீட்டிற்குள் எனது கணவர் வந்தால் நானவரைச்சுற்றி வரவும் அவர் என்னைச்சுற்றி வரவும் அவருக்கு சிற்றுண்டியோ உண வோ எல்லாம் நான் நேரில் கொடுத்து உபசரிக்கவும் இன்னும் அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை யெல்லாம் நானாக வே செய்யவும் போகிறதுமாயிருக்கிறது. இப்படியெல்லாம் கிடைப்பதருமை. நான் அரிசி தீட்டிககொண்டிருந்தபடியால் கஷ்டத்துடன் வேலைசெய்கிறதாகவும் நினைத்துக்குறிப்பாய் பேசியதையுமறிந்தேன். நமவீட்டு வேலையை நாம்பார்ப்பதில் இழிவொன்றுமில்லை. கடவுள் நமக்கு ஆக்கப் பொருளாயமைத்துக் கொடுத்ததில் உரலும் உலககையும் அம்மியும் குளவியும் சிறந்தவையாகும். இதனை நாம் கையாளாவிட்டால் நமது இயற்கை சக்திவிருத்தியடையமாட்டாது. நாம சக்தி குன்றியவர்களாயிருந்தால் நமது பிள்ளைகளைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. நாம் வேலைசெய்ய பின்வாங்குவோமேயானால் நமது வயிற்றில் பிறக்கும் பெண்களும் வேலை செய்ய மாட்டாது. இவைகளையெல்லாம சிந்தித்துப்பார்க்க வேண்டும. போதும் என்ற மனமே பொன் செய்யுமருந்தென்னும் வாக்கியத்திற்கேற்ப கிடைத்ததைககொண்டு தான் நாம மகிழ்ச்சியோடிருககவேண்டுமென்று கூறவுமிதனைக்கேட்ட மூவரும,

(தொடரும்)

"வேளாளன்" பத்திரிகாலயத் திறப்புவிழா.

சென்ற சித்திரை ௴ 9-உ (21-4-29) காலை 10-மணி முதல் 12-30 மணிவரை தூத்துக்குடிமேலூர் சி. வ. அவர்கள் கலாசாலையில் ஆண்டவனருளாலும் அன்பர்கள் ஆதரவாலும் அதிவிமரிசையாய் நடைபெற்றது. அப்பொழுது, திருநெல்வேலி, திருமிகு. சுந்தரஓதுவாமூர்த்திகளின் குழாத்தினர் தேவாரமுதலிய திருமறைகளை ஓதினர். ஓதியபின் திருவாளர். S. G. சுப்பிரமணிய பிள்ளையவாகள் திருவாளர். T. K. கோவிந்த ஐயரவர்களைத் (ஜில்லா முனிசீபு) தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொள்ள, திருவாளர், சி. த. சிதம்பரம பிள்ளையவர்கள் அதனை ஆமோதிகக

திருவாளர் T. K. கோவிந்தஐய்யரவர்கள்

தலைமைவகித்துப்பேசியதின் சாராம்சமாவது:—

கனவான்களே! உங்களில் பெரியமனிதர்கள் பலரிருக்க என்னைத் தலைமை வகிக்கச்செய்தது என் பாக்கியமே. தற்காலராஜீய நிலைமையில் ஒவ்வொரு சமூகத்தினரும் முன்னேற்றமடைய வேண்டியதவசியமே. சமூகமுன்னேற்றம் தேசமுன்னேற்றத்திற்கு சாதகமே தவிர பாதகமில்லை. எவ்வாறு எனின், தேசமாகிய உடலுக்குச்சமூகமாகிய அவயவங்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு அவயவங்களும் பழுதில்லாமல் பலமுடனிருத்தல் வேண்டும். பழுதுடன் ஒரு அவயவமிருந்தாலும் அது உடலுக்கே கெடுதலையும், பார்வைக்கு வெறுப்பையும் கொடுக்கும்.

சமூக வளர்ச்சிக்கு அவசியமானது பத்திரிகை. நமது பொன்னம்பலம பிள்ளையவர்கள் வேளாளர் சமூக முன்னேற்றங் கருதி "வேளாளன்" பத்திரிகையை ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் ஆரம்பித்திருக்கும் பெரியவேலை இடையூறின்றி இனிது நடைபெறுவதற்கு எல்லாம்வல்ல இறைவன் இன்னருள் புரிவாரென்பது நிச்சயம். எவ்வாறென்றால் வேளாளருக்கு இன்றியமையாதது வேளாண்மைத்தொழில். வேளாண்மைத் தொழிலுக்கு மழை மிக அவசியம். மழை இன்று பெய்வதால் இது ஒரு சுபசகுனமாகும்.

வேளாளன் பத்திரிகைக்குச் சிறப்பாக வேளாளர்களெல்லாம் சந்தா தார்களாகச் சேர்ந்தும் தகுந்த நன்கொடைகள் கொடுத்தும் ஆதரிக்கவேண்டியதவசியம். வேளாளர்களில் செல்வ வந்தர்கள் பலரிருப்பதால் "வேளாளன்" பத்திரிகை செவ்வனே நடைபெறுவதற்குச் சிறிதும் ஐயமில்லை யெனப்பேசி முடித்தபிறகு திருநெல்வேலி, திருவாளர் சுந்தரஓதுவாமூர்த்திய வர்களை "வேளாளர் கடமை" என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசும்படி கேட்டுக் கொள்ள

திருவாளர், சுந்தரஓதுவாமூர்த்திகள்.

அன்பர்களே! நேரம் அதிகமாகி விட்டதால் நான் வேளாளர் கடமையைப்பற்றி விரிவாகப்பேசப் போவதில்லை. சுருக்கமாகச

சொன்னால் வேளாளர்கள் முற்காலத்தில் எவ்வளவு உயர்ந்திருந்தார்களோ அவ்வளவு தாழ்ந்திருக்கிறார்களென்று சொல்லலாம். அகிலநாயகி அறம்வளர்த்தம்மையார் இருநாழிநெல்லைக் கொண்டு முப்பத்திரண்டு தர்மங்கள்செய்ய "பிள்ளை" என்றழைத்துக்கொடுக்கப் பெற்றவர்கள் நாமே. பிள்ளைமார் என்றபட்டமும இதனாலே நமக்குவந்தது. இத்தகைய பெருமைபொருந்திய நாம் மிகவும்தாழ்ந்த நிலைமையிலிருக்கின்றோம். பழையகாலத்திலிருந்தபடி உயர்ந்தநிலைமைக்கு வரவேண்டியதவசியம். அதற்கு அனுகூலமாகவே "வேளாளன்" பத்திரிகை வெளிவருகின்றது. அதனை ஆதரிப்பதே வேளாளர் கடமையாகும் எனப்பேசி முடித்தபிறகு

முறப்பநாடு, சப்ரிஸ்தர் திருவாளர்
K. அறம்வளர்த்தநாத பிள்ளையவர்கள்.

கனவான்களே! தற்காலத்தில் ஒவ்வொரு ஜாதியினரும் தங்கள் முன்னேற்றங்கருதி சங்கங்கள் ஸ்தாபித்தும், பத்திரிகைகள் நடத்தியும் முன்னேற்றமடைந்து வருகின்றனர். நம்மவருக்கு மட்டும பத்திரிகையில்லை. இப்பொழுது நமது பொன்னம்பலம்பிள்ளையவர்கள் நமது முன்னேற்றத்திற்காக "வேளாளன்" பத்திரிகையை ஆரம்பித்திருக்கிறார்கள். "வேளாளன்" பத்திரிகை மிகவும் அவசியமென்று நான் கருதுகின்றேன். வேளாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கம், பேங்கு, முதலியவைகள் நியமித்து அதன்மூலம் கைத்தொழில் விவசாயம் வியாபாரம் முதலியதுறைகளை அபிவிர்த்திசெய்து ஏழியவர்களை முன்னேற்றமடையச் செய்யவேண்டும். வேலையில்லாமல் திண்டாடும் வேளாளருக்கு வேலைகிடைக்கும்படி செய்யவேண்டும். இவ்வகைகளுக்கெல்லாம் நமது "வேளாளன்" பத்திரிகை பயன்படும். ஆகையால் நாம் வேளாளன் பத்திரிகையை வேற்றுமையில்லாமல் மிக ஊக்கத்துடனும் உண்மையுடனும் ஆதரிக்க வேண்டும் எனப்பேசியபின்

ஸ்ரீவைகுண்டம் தாலுகாபோர்டு தலைவரும், நிலசுவான் சங்கசிறுவியாருமாகிய

திருவாளர் ஆ. சங்கரலிங்கக் கவிராஜரவர்கள்

சகோதரர்களே! என்னினும் தகுதியுடையவர்கள் பலரிருக்க

என்னை "வேளாளன்" பத்திரிகாலயத்தைத் திறந்துவைக்கும்படி சொல்லியது என்பேரில் ஏற்பட்ட அன்பேதவிர வேறில்லை. எனக்கு அதிகமாகப்பேச ஆற்றலில்லை. நமதுசமுகம் தாழ்ந்துவருவதற்கு காரணம் நமக்குள் ஒற்றுமையில்லாமையும் எலக்ஷன்களில் போட்டி போட்டுப் பணத்தைச்செலவுசெய்தலும், மதத்தில் பற்றில்லாமையுமேயாகும். இனிமேல் நாம் விவசாயம், கைத்தொழில், வியாபாரம் இவைகளை விர்த்திசெய்து மதத்தில் நம்பிக்கை வைத்து முன்னேற்றமடையவேண்டும். இவைகளை அனுசரித்தே நமது "வேளாளன்" பத்திரிகையை ஆரம்பித்திருக்கிறார்களென்றுநினைக்கின்றேன். நமது முன்னேற்றத்திற்கு பத்திரிகை அவசியமாதலால் பத்திரிகாலயத்தை நான் திறந்துவைத்து உங்கள் அனைவரையும் ஆதரிக்கும்படி கேட்டுக்கொண்டு ஆண்டவனையும் அருள்புரியும்படி பிரார்த்திக்கின்றேன்.

மு. பொன்னம்பலம் பிள்ளை

பெரியோர்களே! பத்திராசிரியன் என்ற முறையில் நானும் சில வார்த்தை பேச வந்திருக்கிறேன். நமது நாட்டில் மிக இழிவாக இகழ்ப்படுவது இரண்டு. அவை வேளாளர் ஜாதியும் ஹிந்து மதமுமேயாகும். இவ்விரண்டிற்கும் உரிமைப்பட்ட நான் இகழ்ச்சிபொருது இவ்வேலையைச் செய்யத் துணிந்துள்ளேன். துணிந்ததிலிருந்து நான் இதுவரை காணாத புதிய அனுபவங்கள் பல காண்கின்றேன். பத்திரிகையை நடத்தப் போதிய கல்வி, செல்வம், உடல்வன்மை ஒன்றும் பெற்றிலேன். என்றாலும் ஆசை மிகுதியாலும், பிறர்முன்வராததாலும் நான் நடத்த முன்வந்தேன். கூடியானவரை நமது "வேளாளன்" பத்திரிகை மற்ற வகுப்பினர்கள் விரும்பவில்லையானாலும் வெறுக்கத்தகாத நிலைமையில் நடைபெறும். என்னிடத்தில் ஏற்படும் குற்றங்களைப் பொறுத்து அபிப்பிராய வேறுபாடுகளை நீக்கி "வேளாளன்" பத்திரிகையை எல்லோரும் ஆதரிக்க வேண்டுகின்றேன். எனது வேண்டுதலுக்கு விருப்புடன் இசைந்துள்ள தலைவரவர்களுக்கும் திறப்புவிழாத் தலைவரவர்களுக்கும் சொற்பொழிவாளர்களுக்கும் ஏனையோருக்கும் என்வந்தனம் எனப்பேசி முடித்தபின் பலர் பத்திரிகைக்குச் சந்தாதார்களாகச்சேர்ந்தார்கள். மங்களத்துடன் சபைபெறுகிற்று.

குறிப்புகள்.

வரவேற்கின்றோம்

தூத்துக்குடிக்கு ஜில்லா முன்சீபாக நமது சமூக கனவான் திருவாளர் க்ஷேமநிதியகம் பிள்ளையவர்கள் தேவகோட்டையிலிருந்து மாற்றப்பட்டு வந்திருக்கிறார்கள். இவர்கள் சொந்த ஊர் திருநெல்வேலி, வக்கீலாகயிருந்து முன்சீபாக வந்தவர்கள். முன்சீபாக வந்து சுமார் ஆறுவருடம் ஆகிறதென்று அறிகின்றோம். இன்னும் வேலை காயமாக வில்லையாம். விரைவில் காயமாகுமெனத் தெரிந்து மகிழ்ச்சியடைகின்றோம். திறமையும், நடுவு நிலைமையுமுடையவர்களென அறிகின்றோம். இவர்களை வந்தனத்துடன் வரவேற்கின்றோம்.

வழியனுப்புகின்றோம்

--நமது சந்தாநேயரும் ஜில்லா முன்சீபுமான திருவாளர் T. K. கோவிந்த ஐயரவர்கள் மூன்று வருடகாலமாக தூத்துக்குடியில் ஜில்லா முன்சீபாக வேலைபார்த்து வந்தார்கள். இவர்கள் வழக்குகளிலுள்ள நியாயத்தை நுட்பமாகத் தெரிந்துகொள்ளுந்திறமையும் மனச்சான்றாக நடுவு நிலைமையுடன் நியாயம் வழங்கும் குணமும், யாரிடத்தும் அன்பும் இரக்கமும் உடையவர்கள். இவர்கள் தூத்துக்குடியிலிருந்து மாற்றப் பெற்றுள்ளார்கள். மாற்றிப் போகும் பொழுது வழியனுப்ப வந்திருந்த பிரபலஸ்தர்கள் பலர் பொது மக்கள் பலர். இவர்களை வழியனுப்ப வந்திருந்த கூட்டம போல் இதன்முன் யாரையும் வழியனுப்ப வந்ததில்லை. இவர்கள் நீண்ட ஆயுளும் உயர்ந்த உத்தியோகமும் பெற்று சுகத்துடன் வாழ விரும்புகின்றோம். வந்தனத்துடன் வழியனுப்புகின்றோம்.

புதிய சங்க உற்பத்தி

வேளாள வாலிபர் சங்கம் என்னும் பெயருடன் தூத்துக்குடியில் நம் சமூக இளைஞர்களால் நிறுவப்பெற்று காலது மேமீ 12உ ஞாயிற்றுக்கிழமை சி. வ. அவர்கள் கலாசாலையில் திருவாளர்

தி. த. சிதம்பரம் பிள்ளையவர்கள் தலைமையில் முதற் கூட்டம் கூடிற்று. அப்பொழுது சங்கத்தலைவராகத் திருவாளர். சி. வ. சின்னக்கண்ணுப் பிள்ளையவர்களையும் காரியதரிசியாக திரு. K. L. கந்தசாமி பிள்ளையவர்களையும் தேர்ந்தெடுத்திருப்பதாக அறிகின்றோம். செல்வம்பெற்ற இளைஞர்கள் இதனை ஆரம்பித்திருப்பதால் சிறப்புடன் சங்கம் நடைபெறுமென நம்புகின்றோம். நமது வேளாள வாலிபர்களெல்லாரும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து சங்கத்தை ஆதரித்தல் நலமெனக் கருதுகின்றோம்.

பிரிவாற்றாமை

தூத்துக்குடியில் சில ஆண்டுகளாகக் குடியிருந்து முனிசிப்பல் கலாசாலையில் தலைமை உபாத்தியாயராக இருந்து வைத்தியப் பயிற்சியும் பெற்று வாழ்ந்துவந்த பாப்பான்குளம், கெ. சவுந்தர சுப்பிரமணிய முதலியாரவர்கள் சென்றமாதம் சுரநோயால் பிடிக்கப்பெற்று இளமைப் பருவத்தில் மனைவியையும் மக்களையும் பரிதவிக்கும் நிலைமையில் வைத்துவிட்டு காலகதியடைந்தமைகுறித்துப் பெரிதும் வருந்துகின்றோம். முதலியாரவர்கள் நம் சமூக முன்னேற்றத்தில் ஆர்வமுடையவர். சோம்பலின்றி சுறுசுறுப்பாக வேலைசெய்வார். நமது வேளாளனுக்குச் சில கனவான்களின் விலாசமும் ஒரு வியாசமும் எழுதித் தந்திருந்தார். இவர் சில ஆண்டுகளுக்கு முன் "வேளாளர் நேசன்" என்னும் பெயருடன் ஓர் பத்திரிகை நடத்த முயற்சிசெய்தார். இத்தகைய அன்பரின்பிரிவு நம் சமூகத்திற்கு சிறிது நஷ்டமென்றே நாம் கருதுகின்றோம்.

ஆறுதல் அளிப்பாராக.

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் போதகாசிரியரான திருவாளர், ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் தமது முதுமைப்பருவத்தில் மனைவியையும் மகள் ஒருத்தியையும் இழந்த மனவருத்தம் மாறுவதற்குள் இருந்த இருபெண்மக்களில் ஒருமகளைச் சிலமாதங்களுக்கு முன் இழக்க நேர்ந்தது பற்றிப் பெரிதும் வருந்துகின்றோம். துன்பத்தின் மேற்றுன்பம் அநுபவிக்கும் பிள்ளையவர்களுக்கு ஆண்டவன் ஆறுதலளிப்பாராக.

வேளாளர் கல்வி யபிவிர்த்தி சங்கம்.

இச்சங்கத்திலிருந்து 1337-ம் பசலி [1929 ஜுன்மீ முடிய] 150 மாணவர்களுக்குக் கடன் உதவியாக ரூ 13535—1—0-ம், இனாம் உதவியாக ரூ 11017—1—0 321 மாணவர்களுக்கும் கொடுத்து உதவி செய்திருக்கிறது. இத்தகைய உதவிகள் இன்னும் பல செய்யக்கருதிய இச்சங்கத்தின் நிர்வாகப் பொறுப்புள்ள கனவான்களில் சிலர் நன் கொடைவசூலிப்பதன் பொருட்டுக் கொழும்புக்குச் சென்றிருக்கிறார்கள். சென்றுள்ள கனவான்கள் அம்பாசமுத்திரம், வக்கீல், திருவாளர், K. A. சிவஞானம் பிள்ளையவர்கள், வண்ணார்பேட்டை, வக்கீல், P. ஆவுடையப்ப பிள்ளையவர்கள், தூத்துக்குடி வக்கீல் P. V. கணபதியப்பபிள்ளையவர்களாகிய மூவர்களென அறிகிறோம். இவர்களுக்கு வேண்டும் வசதிகள் செய்து தகுந்தபடி பொருள் உதவி செய்தனுப்பக் கொழும்பு நகர் வாசிகளைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நன்கொடை நல்கும் நம்மவர்.

ஊர்பெயர் அறிவிக்க விரும்பாத ஆடம்பரமற்ற அன்பர் ஒருவர் ரூபாய் ஐம்பது நமது வேளாளனுக்கு நன்கொடையளிப்பதாய் அறிவித்திருக்கிறார். இவ் அன்பரின் அளவிலாத சமூகப்பற்றும் சமயப்பற்றும் போற்றற்குரியது. இவ் அன்பர் பணநிறைவு இல்லாதவர்; எனினும் மனநிறைவின் மாண்பு மதிப்பிடத்தகையதன்று. இத்தகைய அன்பரின் ஊர் பெயர் பொதுமக்கள் அறிய விரும்புவது இயற்கை; ஆதலின் அன்பரின் அனுமதி பெற்றுக் கூடியவிரைவில் வெளியிடக் கருதியுள்ளோம். இவர் மன நிறைவின் பலனாக எல்லாம் வல்ல இறைவன் இவருக்கு ஆனந்தமும் அருளுவானாக.

திருமணம்.

நமது சந்தாநேயருள் ஒருவரான திரு. சு. சிவசுப்பிரமணிய பிள்ளையவர்களுக்குச் சென்ற சித்திரைமீ 19௳ [1-5-29] புதன் கிழமை சுபயோக சுபதினத்தில் தூத்துக்குடியில் மணமகன் இல்

லத்தில் திருமணம் சிறப்புடன் நடைபெற்றது. மணமக்கள் மக்கட்பேறு முதலிய பேறுகள் பல பெற்று மாண்புடன் வாழ்வார்களாக.

ஆலயம் அமைத்த அறிஞர்

தூத்துக்குடியில் கோட்டை ஆபீஸ் புரோக்கராக வாழ்ந்து வரும் திருவாளர், Vc கண்ணாயிரம் பிள்ளையவர்கள் தங்களீ சொத்தில் சுமார் காலில் ஒருபாகத்தை [ரூபாய் சுமார் இருபத்தையாயிரம்] ச் செலவுசெய்து சாத்தூரில் முருகப்பெருமான் ஆலயம் ஒன்று அன்புடன் அமைத்து அதற்கு வேண்டும் நித்திய பூஜை நிவேதனத்திற்கு வேண்டுவன கொடுத்து ஆதரித்து வருகின்றனர். இவர்களின் சமயப் பற்றுப் போற்று தற்குரியது. இவர்கள் நம் சமுக மக்களுக்குச் சிறப்பாகவும் பொது மக்களுக்குப் பொதுவாகவும் உதவிசெய்து வருகின்றனர். இவர்கள்வாழ்க்கை மென்மேலும் உயர் வடைந்து வர இறைவனை இறைஞ்சுகின்றோம்.

திருத்தம்

சென்ற இதழில் புகழ்மிகுந்த புண்ணியச்செயல் என்ற தலைப்பில் சி. சு. வ. குடும்பத்தினர் செய்த தர்மம் என்ற இடத்தில் திருவாளர், மா. கிருஷ்ண பிள்ளையவர்கள் இறக்குந் தருவாயில் வாய்மொழியாகச் சொல்லியதர்மம் என்று மாற்றி வாசித்துக்கொள்க.

நகர நடப்பு

வக்கீல் குமாஸ்த்தாக்களால் நடத்தப்பட்டு வரும் கம்பசபையின் இவ்வாண்டு நிறைவுவிழா மூன்று நாட்களாக முறையே பக்கவாத்தியத்துடன் கதையும், புல்லாங்குழல் கச்சேரியும், இரண்டு பிரசங்கங்களும் மிகச் சிறப்புடன் நடைபெற்றது.

காலஞ்சென்ற சங்கரலிங்கம் பிள்ளையவர்களால் நிறுவப்பெற்ற சற்ஜன சபையில் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் தினத்தை மிகப்பக்தி சிரத்தையுடன் கொண்டாடியதோடு, மணம்பூண்டி ம. ரா. குமாரசாமி பிள்ளையவர்கள் காலஞ்சென்றமைகுறித்து அநுதாபத்தீர்மானமும் நிறைவேற்றினார்கள்.

சைவசித்தாந்த சபையில் காலஞ்சென்ற ம. ரா. குமாரசாமி பிள்ளையவர்களுக்கு அநுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்ற பெற்றது. அப்பொழுது திரு. சி. த. சிதம்பரம் பிள்ளையவர்கள் தலைமை வகித்தார்கள். ஆர்வத்துடனும் அநுதாபத்துடனும் அன்பர்கள் பலர் பேசினார்கள்.

காங்கிரஸின் சார்பாக 28-4-29ல் வட்டக்கிணற்று மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது பொதுமக்களால் காங்கிரஸின் சார்பாக மணம்பூண்டி, ம. ரா. குமாரசாமி பிள்ளையவர்கள் காலகதியடைந்ததற்காக வருத்தத்துடன் அநுதாபம் காட்டப் பெற்றது.

மாதர்களின் நலங்கருதி நிறுவப்பெற்று நடைபெற்றுவரும் பாகம்பிரியாள் சங்கத்தில் மணம்பூண்டி ம. ரா. குமாரசாமி பிள்ளையவர்கள் மரணத்தைக்குறித்து மனவருத்தத்துடன் அநுதாபத் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது. அப்பொழுது மதுரை. குவாப்ப ரேட்டிவ் சொஸைட்டி டிப்டிரிஜிஸ்டார்.திருவாளர், C. D. நாயகம் பிள்ளையவர்கள் மனைவி, ஸ்ரீமதி. சிதம்பர நாயகத்தம்மாள் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

நாட்டு நிகழ்வு

தென் திருவிதாங்கூர் திருநெறித் தொண்டர் குழாம்.

எல்லாம் வல்ல இறைவன் அருளால் தென் திருவிதாங்கூரில் 35 கிளைகளையும் 3000 அங்கத்தினர்களையும் கொண்டு விளங்கும் திருநெறித் தொண்டர் குழாம் எனும் இயக்கம் ஒன்று நிகழ்ந்து வருகின்றது. இக்குழாத்தின் அங்கத்தினர் சமயம்-ஒழுக்கம் வகாருண்யம்; ஒற்றுமை முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு தொண்டாற்றி வருகின்றனர். தொண்டர்களின் ஒற்றுமை உழைப்பு மிகவும் பாராட்டத்தக்கது இவர்கள் அனைவரும் உடன்பிறந்தார் போன்று ஒத்துழைத்துவருகின்றார்கள். இவ்வியக்கம்

மக்களிடையே சமயஞானம் பரப்பி, சமயவாழ்வு வாழச் செய்து ஒழுக்கத்தை வளரச் செய்து ஐக்கியத்தை நிலைபெறச் செய்கின்றது. இவ்விதக் கழகங்களை தென்னிந்தியா முழுதும் பரப்ப கழகத்தினர் முன்வந்திருக்கின்றனர். எங்கும் இவ்விதக் கழகங்கள் நிறைந்து மக்களனைவரும் இறைவனது இன்னருள் பெற்றுய்யுமாறு ஈசன் துணைபுரிவாராகுக.

திருச்செந்தூர். திருச்செந்திலாதிபன் திருவருட் சங்கம். காரியதரிசி அறிவிப்பது.

திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசைத்திருவிழா.

1104. ௵, சித்திரை ௴ 21-ம் நாள் இரவு 8 மணிக்கு சிவன்கோயில்முன் சடைவீதிக் கொட்டகையில் பலவர் அன்பர்கள் கூடினார்கள். ஸ்ரீமான் இலக்குமணபிள்ளை யவர்களும் இன்னிசையோடு தேவாரம் திருவாசகம் ஓதினார்கள். ஆத்தூர் மசிசிரஸ்தார் சைவத்திருவாளர் இராமலிங்கம்பிள்ளையவர்கள் அவைத்தலைமையில் திருவளர் அருணாசலம் பிள்ளை யவர்கள் நாவுக்கரசர் சரிதத்தை பேசினார்கள். சங்கத்தின் காரியதரிசியும் திருவாளர் விநாயக ஓதுவார் மூர்த்தியவர்களும் சுவாமிகள் சரிதத்தை பலநூலாதரவோடு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தலைவரவர்கள் பிரசங்கம்செய்த மூவரையும் முறையோடு ஆமோதித்தும் உலகினர் நடந்து கொள்ள வேண்டிய முறையை நமது அப்ப மூர்த்திகள் அன்பின் பொருட்டால் நடத்திக்காட்டினார் என்றும் சொல் பெருக்கிட்டார்கள். 12 மணிக்கு சுவாமிகளுக்குப் பூசை செய்து அன்பர்கள் எல்லாம் ஒக்க இருந்து மகேசுர பூசை முறையில் அருந்தினார்கள்.